<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | **51/2022** | சாட்சியம் | **:** | **PW1** |
| **Name** | **:** | திரு.**Vignesh** | | | |
| **Date** | **:** | **24.10.2024** | | | |
| **Time** | **:** | **1.34 p.m to 1.45 p.m** | | | |

<u>ம.த.சா.**1** திரு.**Vignesh** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் நான்காம் மனுதாரர் என்றால் ஆமாம். திரு.சண்முகம் என் அப்பா என்றால் ஆமாம். அவரின் வாரிசுதாரர் என்ற முறையில் மனு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆமாம். முதலில் என் அப்பாவை அவருடைய வேலையின் கவனக்குறைவு காரணமாக பணிநீக்கம் செய்து அதன் முன்னிலைக்கு என் அப்பா தாக்கல் செய்த தொழிற் தாவா (ஐடி.654/2001) முன்னிலைக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு அதன் பின்னர் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றால் ஆமாம். உயர்நீதிமன்றம் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என பிறப்பித்த உத்தரவு முன்னிலைக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் ரூ.**5,45,265/-** வழங்கினார்கள் என்றால் தெரியாது. அதன் முன்னிலைக்கு நீதி பேராணை மேல் முறையீடு எண்.5853/2009 தாக்கல் செய்யப்பட்டது என்றால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் தெரியாது அதன் பிறகு மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட என் அப்பா தொடர்ந்து 412 நாட்கள் வேலைக்கு வராத காரணத்தினால் இரண்டாவது முறை வேலை நீக்கம் செய்யப்பட்டு அது சம்பந்தமாக தொழிலாளர் ஆணையருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் ஆமாம். 07.03.2012 அன்று என் தந்தை வேலையில் இருந்து நீக்கப்பட்டார் என்றால் ஆமாம். AP.13/2014 எங்களுக்கு சாதகமாக

முடிவானது என்றால் ஆமாம். உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு (WP.30904/2022) தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம் ரிட் மனு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளம் மற்றும் போனஸ் வழங்கப்படாது என்றால் தெரியாது. எனவே எனவே வேலைக்கு வராத நாட்களுக்கு சம்பளம் போனஸ் ஊதிய உயர்வு கேட்டு தாக்கல் செய்திருக்கும் இந்த மனு நிலைக்கதல்ல தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/-S.Sujatha,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:24.10.2024